©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 26] சென்னை, புதன்கிழமை, ஜூலை 13, 2011
ஆனி 28, திருவள்ளுவர் ஆண்டு–2042

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 237, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K1)த் துறை, நாள்: 26 நவம்பர் 2010.]*

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 34/1948) 1–ஆம் பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகத்துடன் கலந்தாலோசித்தும், மத்திய அரசின் ஒப்புதலுடனும், தமிழ்நாடு அரசின் நோக்கம் பற்றி ஆறுமாதங்களில் அறிவிப்பு கொடுத்தல் என்ற சட்டப்படி செய்யவேண்டியதற்குச் சம்மதித்த பின்னரும், (காண்க 24–6–2008 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–இல் 206 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/266/2008 ஆம் எண் அறிவிக்கை) அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் நீங்கலாக ஏனைய கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளை அதாவது, இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து 12 மாதங்களுக்கு அடுத்துவரும் யாதொரு நாளில் இருபது அல்லது அதற்கு அதிகமான நபர்கள் பணிபுரிகிற அல்லது பணிபுரிந்த தனிநபர்கள்மூலமாக நடத்தப்படும் அல்லது அறங்காவலர்கள், சங்கங்கள் அல்லது ஏனைய பிற நிறுவனங்கள்மூலமாக நடத்தப்படும் கல்வி நிறுவனங்களுக்கும் இதனால் நீட்டிக்கிறார்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP-II-2-26 (T Sup)